03.02.2026

O.S.No. 335/2021

PW1– ராஜலெட்சுமி – த/பெ. வரதராஜு

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 03.02.2026

குறுக்கு விசாரணை : (பிரதிவாதிகள் தரப்பில்)

1. பிராது தபசில் சொத்து எனது கட்சிப்படி சுப்பாநாயுடுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அவருக்கு 2 மனைவிகள் என்றால் எனக்கு சரியாக தெரியாது.

2. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தில் சுப்பாநாயுடுவின் மூத்த தாரத்தின் மகன் வசந்தமுத்து நாயுடு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2வது தாரத்தின் வாரிசுகள் தான் நாராயணசாமி, நவநீதகிருஷ்ணன் மற்றும் பெருமாள் என்றால் சரிதான். மேற்படி நபர்கள் அனைவரும் சேர்ந்து 1894ம் ஆண்டு பாகப்பிரிவினை செய்ததாக வா.சா.ஆ.1 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் வசந்தமுத்து நாயுடுவுக்கு கிழமேல், தென்வடல் அளவுகள் எவ்வளவு கிடைத்தது என தெரியாது. வா.சா.ஆ.1ன் எல்கைமால்கள் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் எனக்கு தெரியாது.

4. வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படும் காலத்திலே பிராது 1ம் தபசில் சொத்தில் வீடு இருந்ததா அல்லது காலிமனை இருந்ததா என்றால் வீடு மற்றும் காலிமனை சேர்ந்தணையாக இருந்தது.

5. வசந்தமுத்துவிற்கு பாகத்தில் வீடு மற்றும் காலிமனை எத்தனை அடி விஸ்தீரணம் என்று என்னால் கூறமுடியாது என்றால் சரிதான். வசந்தமுத்துவின் பெயரில் உள்ள பட்டா, தீர்வை ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

6. வசந்தமுத்துவின் மகன் தான் சங்கரப்ப நாயுடு என்றால் சரிதான். சங்கரப்பநாயுடுவின் மகன் தான் எனது கணவர் என்றால் சரிதான். சங்கரப்பநாயுடுவோ அல்லது எனது கணவரோ தலா எவ்வளவு சொத்து பாத்தியம் என்று எனக்கு சரியாக தெரியாது, எனது கணவர் இறந்ததால்தான் நான் இந்த வழக்கை நடத்திவருகிறேன். எனக்கு வழக்கின் விவரம் தற்போது தெரியுமா என்றால் தெரியும்.

7. எனது வழக்கில் தென்வடல் 22அடி தான் என்று கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தெற்கே மிக்கேல்பிள்ளை வீடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வீடு எவ்வளவு விஸ்தீரணம் என்றும், காலிமனை எவ்வளவு விஸ்தீரணம் என்றும் எனக்கு தெரியாது.

8. பிராதுடன் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.11 வரைபடத்தை வைத்து என்னால் வழக்கு சொத்தை விவரிக்க முடியுமா என்றால் தெரிந்தவரை கூறுகிறேன். 2,3வது தபசில் சொத்துக்கள் 1ம் தபசில் சொத்தின் ஒருபகுதியாகும், நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

9. 3ம் தபசில் என்பது கிழக்கிலிருந்து மேற்காக சென்று பின்பு தெற்காக திரும்பி மறுபடியும் மேற்குபார்த்து செல்கிறது என்றால் சரிதான். 3ம் தபசில் சொத்து அளவுகளை 3 விதமாக திசைகளில் திரும்புவதற்கு ஏற்ப குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல, எனது கணவர் தான் வழக்கறிஞருக்கு விவரங்களை கொடுத்தார். பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட வரைபடத்தை நான் மறுக்கவில்லை என்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்/—K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி